ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பக்தவிஜய அவதாரிகை.

இஃது

மகாராஷ்டிர பாஷையிலிருந்து அனேகவருஷங்களுக்குமுன் ஒரு பெரியவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட பக்தவிஜயமென்னும கிரந்தத்தில் இருக்கும் அனேக பக்தர்களுடைய சரித்திரங்களில் 32 சரித்திரங்கள் மட்டும் முதற்பாகமாக அச்சிடபபட்டிருக்கிறது. அதை சென்னப்பட்டணம் எழும்பூரிலிருந்து இபபோது ஸ்ரீரங்கத்தில் வாசம் செய்துக்கொண்டு ஸ்ரீரங்கநாதன் சந்நிதியில் ஜீர்ணோத்தாரண முதலான கைங்கரியங்கள் செய்துவருகிற

## கோயில் த. தேவராஜ் தாசர்

[illegible]ஷயில் சந்தர்ப்பத்துக்குத்தக்க அனேகப்பிரமாணங்களைச் சேர்த்து மொழி பெயர்த்து வருவதை அதி சீக்கிரத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தப்படும். அதில் அவர் இயற்றிய அவதாரிகையை லோகோபகாரமாய் சிலருடைய வேண்டுகோளின்படி அவர்தாமே தமிழில் எழுதினர். அதைச் சிரத்தையோடு வாசிப்பவர்களுக்கு ஆஸ்திகசித்தாந்தங்களெல்லாத்திலும் த்வேஷபுத்தி நீங்கி ஈஸ்வரவிபூதியானசகல சேதனரிடத்திலும் சோதரபுத்தி உண்டாகும் பொருட்டு

திருவரங்கம் பெரிய கோயிலில் வசிக்கும்

நாகபட்டணம் முனிசிப்பாலிட்டி மாஜி மானேஜராகிய

## கோ. கோபாலசாமி நாயுடு

அவர்களால்

திரிசிரபுரம்


ரிப்பன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு.

1888

Registered Copy-right.

[illegible]·१०९३३



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பக்தவிஜய அவதாரிகை.

நித்யஸூரிகளோடொத்த ப்ராப்தி தமக்குமுண்டாயிருக்க அத் அறியாமல் அனாதிகாலம் தேகமே ஆத்மாவென்றும் சப்தாதிவிஷ மென்றும் அபேக்ஷித்துத்திரிகிற பத்தசம்சாரிகளான ஸர்வேச்வரன் நிர்ஹேதுககடாக்ஷத்தால் தன்னு ரூபகுணவிபூதிகளுக்கு வாசகமான திருநாமப்பிரபாவத்தைக் காட்டக் கண்டப் பக்தர்கள் தாங்களுமனுபவித்து அப்படிப்பட்ட அனுபவத்தைத் அபேக்ஷிக்குமவர்களை அனுபவிப்பிக்கவும் சமர்த்தராய் ஸ்ரீவல்லபனை சந்தோஷிப்பிக்கிறார்கள்.

ஐஹிகத்தில் புண்யபாபரூபமான கர்மங்களை செய்தும் ஆமுஷ்மிகத்தில் சுவர்க்கநரகங்களில் அதின்பலத்தை அனுபவித்தும் இப்படிவரத்துப்போக்காய் யிருக்குமவர்கள் ஸம்ஸாரிகளாவார்கள்.

புண்யபாபரூபமான கர்மங்களை சுவர்க்க நரகங்களில் அனுபவித்து கர்மசேஷத்தோடே பூமியில்கர்ப்பவாசம் செய்யவரும்வழியில் இவ்வாத்மா படும்துன்பத்தை வேதாந்தத்தில் பஞ்சாக்நிவித்யை யென்னுமிடத்தில் சொல்லியிருக்கிறது.

யாதனாசரீரத்தோடே நரகாநுபவம் செய்து அந்தசரீரத்தை அங்கேவிட்டுப்பிறகு புண்யசரீரத்தை அடைந்து சுவர்க்காநுபவம் செய்து அந்தசரீரத்தைஅங்கேவிட்டுஸூக்ஷ்மசரீரத்தோடேஆகாசத்தில் வர்த்திக்கும். ஸூரியன்தன்கிரணங்களாலேஜலாகர்ஷணம்செய்யும்போது ஆகாசத்திலிருக்கும் இவ்வாத்மாவைஆகர்ஷித்துமேகத்தில் புகவிடுவன். அந்த ஜலம்வர்ஷரூபமாய்பரிணமிக்கும் வரையில் அங்கேயிருந்து வர்ஷதாரைகளுடன் பூமியில்விழும். அந்த ஜலம் பயிருக்கு தாரகமாய்ப் பிற

களென்றும் கடைசியில் சிவகடாக்ஷத்தால மீட்சியில்லாத மோக்ஷத்தை அடைவரென்றும் இவர்கள் தங்களை உபாஸிக்குமவர்களுக்கு மோக்ஷத்தை அளிக்க சக்தரல்லரென்றும் இதர பலன்களை கொடுப்பரென்றும் மோக்ஷத்தை விரும்புமவர்கள் பரமாத்மாவான சிவனைவிட்டு இதர தெய்வங்களை ஆராதிப்பதும் இதரதெய்வங்களை சிவனோடு சமமாக நினைக்கையும் ஸ்வரூபவிரோதமென்றும் இந்த தேவதைகள் சிலவிடங்களில் சிவனால் பரிபவிக்கப்பட்டார்களென்றும் மோக்ஷத்தைவிரும்புமவர்கள் இவர்களுக்கு வந்தனாதிகள் செய்யக்கூடாதென்றும இவர்கள் நிர்மால்யத்தை அங்கீகரிக்கக்கூடாதென்றும் சிவாலயங்களில் சிவபரிவார தெய்வங்களான விஷ்ணு முதலானவர்கள் விஷயத்தில்வந்தன கீர்த்தன நிர்மால்யஸ்வீகாராதிகள் கூடுமென்றும் அந்த பரிவாரதெய்வங்களை சிவபக்தரென்று கௌரவிக்கவேண்டுமென்றும் இதரதேவர்களை உபாஸிக்குமவர்களுடன் ஸஹவாஸஸல்லாபங்கள் செய்யக்கூடாதென்றும் சைவர்களுக்கு த்ரிபுண்ட்ரருத்ராக்ஷதாரணாதிகள் உபாதேயமென்றும் ஊர்த்வபுண்ட்ரதப்த சக்ராங்காதிகள் த்யாச்யமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் வைஷ்ணவஸித்தாந்தத்தில் விஷ்ணுவுபாஸனம் செய்தவஸிஷ்டவியாஸாதிமஹர்ஷிகள் வைஷ்ணவ வேஷதாரிகளாய் இருந்தனரென்றும் சைவஸித்தாந்தத்தில் அந்த மஹர்ஷிகளைசிவோபாஸனம்செய்து சைவவேஷதாரிகளாய் இருந்தனரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விதமாகவே அவ்வோஸித்தாந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. திருஷ்டாந்தத்திற்காக சைவ வைஷ்ணவங்கள் மாத்திரம் இங்கு எழுதப்படுகிறது.

பக்கவிஜயத்தில் உதஹரிக்கப்பட்ட பக்தர்கள் விஷயத்தில் சைவ வைஷ்ணவர் முதலான ஆஸ்திகர்கள் அசூயைப்படாமலிருக்கும்பொருட்டு ஆஸ்திகஸித்தாந்தங்களை ஐக்யம் செய்து சமாதானம் யெழுதுகிறேன்.

பரமாத்மா ஒருவனென்றும் அந்தபரமாத்மாவுக்கு ஸமானரும் அதிகரும் இல்லையென்றும் அந்த பரமாத்மாவை உபாஸித்து மோக்ஷத்தை அடையவேணுமென்றும் ஸர்வஸித்தாந்தங்களும் ஒரே அபிப்ராயமாக சொல்லுகிறது. இதையோசிக்குமளவில் ஸர்வஸித்தாந்தங்களில் மோக்ஷத்தை விரும்புமோர்களால் உபாஸிக்கப்படும் பரப்ரம்ஹம் ஒன்றேயென்று நிச்சயமாகிறதல்லவா.

அந்த பரப்ரம்ஹம் நாமரூபமில்லாதது (அவ்யக்தோய மசிந்த்யோய மவிகார்யோய முச்யதே தஸ்மாதேவம் விதித்வைநம் நாநுசோசிதுமர்ஹஸி) அதாவது ஜீவாத்மா கண்ணுக்கும்மனதுக்கும் யெட்டாததென்றும் விகாரமில்லாததென்றும் பகவத்கீதையில் சொல்லப்

பட்டிருக்கிறது. ஜீவாத்மாவுக்கே நாமரூபங்களில்லாதபோது பரமாத்மாவுக்கு யெப்படிவுண்டாகும். கர்மசம்மந்தத்தால் ஜீவாத்மாவுக்கு சரீரம் உண்டாய் அதின்மூலமாக நாமரூபங்கள் உண்டானதுபோல பரமாத்மாவுக்கு இச்சையால் திவ்விய சரீரம் உண்டாய் அதின்மூலமாய் நாமரூபங்கள் உண்டாயின (பஹூநிமேவ்யதீதாநி ஜந்மாநிதவசார்ஜுந) என்கிறபடியே ஓ அர்ச்சுனா யெனக்கும் உனக்கும் அனேகஜன்மங்கள் ஆச்சுதென்றும் (அஜோபிஸந்நவ்ய யாத்மா பூதாநாமீச்வரோபிஸந் ப்ரக்ருதிம்ஸ்வா மதிஷ்டாய ஸம்பவாம் யாத்மமாயயா) அதாவது நான் ஜென்மமில்லாதவன் விகாரரஹிதன் ஸமஸ்தப்பிராணிகளுக்கு ஈச்வரன். ஆயினும் என்னுடையதான பிரகிருதியை அவலம்பித்து என்மாயையால் அவதரிக்கிறேன் என்றும் பகவத்கீதையில்பகவான் தானே அருளிச்செய்தான். பரமாத்மாவுக்கு இந்த சமாதானத்தால் அனந்த சரீரங்கள் உண்டானபடியால் நாமரூபங்களும் அனந்தங்களென்று வேறாகச் சொல்லவேண்டியதில்லை.

இனிநித்ய விபூதியை யோசிக்குமளவில் ஸ்ரீவைகுண்டதிவ்ய லோகத்தில் ஸ்ரீவைகுண்ட திவ்ய ஜனபதத்தில் ஸ்ரீவைகுண்டதிவ்ய நகரத்தில் ஸ்ரீவைகுண்ட திவ்ய விமானத்தில் ஆனந்தமண்டபத்தில் பர்யங்கவித்யையில் சொல்லப்பட்டிருக்கும் தியானப்பிரகாரம் ஸர்வேச்வரன் ஸந்நிதிசெய்து இருக்கிறனென்றுபிரமாணங்கள் சொல்லுகின்றன. இந்நாலந்நித்யவிபூதியில் ஜனபதங்களும் நகரங்களும் விமானங்களும் மண்டபங்களும் ஆங்காங்கு ஸந்நிதிசெய்திருக்கப்பகவன் மூர்த்திகளும் அனந்தங்களென்று வ்யக்தமாகிறதல்லவா. நித்ய விபூதியில் அயோத்யை யென்னும் தேசவிசேஷமுண்டென்றும் அதில் பகவான் ராமரூபியாய் இருக்கிறனென்றும் ராமதாபனீயத்திலும் நித்ய விபூதியில் கோலோகமென்னும் ஸ்தலவிசேஷமுண்டென்றும் அதில் பகவான் கோபாலரூபியாயிருக்கிறனென்றும் கோபாலதாபனீயத்திலும் சொல்லியிருக்கிறது. இபபடியே சைவஸித்தாந்தத்தில் நித்ய விபூதியில் கைலாஸமிருக்கிறதென்றும் அதில் பரமாத்மா பிரமதகணஸேவிதனாய் சிவரூபியாய் இருக்கிறனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சிவபரமான உபநிஷத்துக்கள் அந்த சித்தாந்தத்துக்குப்பிரமாணங்களாய் இருக்கின்றன. ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் இரண்டாம் அம்சத்தில் நான்காமத்தியாயத்தில் பகவான் பிலக்ஷத்வீபத்தில் ஸோமரூபியாயும்-சால்மலித்வீபத்தில் வாயுரூபியாயும்-குசத்வீபத்தில் சதுர்முகரூபியாயும்-க்ரவுஞ்சத் வீபத்தில்சிவரூபியாயும்-சாகத்வீபத்தில் ஸூர்ய ரூபியாயும் அந்தந்தத்வீபவாஸிகளால் ஆராதிக்கப்படுகிறனென்று சொல்லப்பட்டிருக்கிறது. பாகவதத்தில் பஞ்சம ஸ்கந்தத்தில் பகவான் சிவரூபியாய் இளாவ்ருத வர்ஷத்துக்கும் ஹயக்ரீவ ரூபியாய்

பத்ராச்வ வர்ஷத்துக்கும்- நரசிம்ஹ ரூபியாய் ஹரி வர்ஷத்துக்கும்- மன்மத ரூபியாய் கேதுமால வர்ஷத்துக்கும்-கூர்ம ரூபியாய் ஹிரண்மயவர்ஷத்துக்கும்-இராம ரூபியாய் கிம்புருஷவர்ஷத்துக்கும்-பதரீநாராயண ரூபியாய் பாரத வர்ஷத்துக்கும் அதிபதியாயிருக்கிறானென்றும்- அவ்வவ் வருஷஜனங்கள் அவ்வம் மூர்த்தி விஷயமான மந்த்ர ஜபத்யானாதிகளால் பகவானைஉபாஸித்துஐஹிகாமுஷ்மிக பலங்களை அடைகிறார்களென்றும் செப்பியிருக்கிறது. சைவபுராணங்களிலும் இப்படியே சொல்லியிருக்கிறது. இந்தப் புராணங்களில் பரஸ்பரம் கொஞ்சம் பேதமுண்டானால் அது கல்பபேதத்தால் உண்டானதென்று அங்கீகரிக்க வேண்டும்.

வைஷ்ணவர்களுக்கு முக்கியப் பிரபந்தமான திருவாய் மொழியில் (பலபலவே யாபரணம் பேரும் பலபலவே பலபலவே சோதிவடிவுபண்பெண்ணில்) அதாவது ஸர்வேஸ்வரனுக்கு நாம ரூபாதிகள் அனந்தங்களென்றும் முதல்திருவந்தாதியில்(தமருகந்ததெவ்வுருவ மவ்வுருவந்தானே தமருகந்ததெப்பேர் மற்றப்பேர்) அதாவது ஆச்ரிதர் அபேக்ஷிக்கும் நாம ரூபங்களுடன் பகவான் உபாஸ்யனாவானென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியே சைவப்பிரபந்தங்களும் சொல்லுகின்றன.

லோகத்தில்ஒருகுழந்தை உண்டானால்அக்குழந்தைக்குமாதாபிதாக்கள் ரூபமாவது-பிதாவினுடைய தாய்தந்தைகள் ரூபமாவது-மாதாவினுடைய தாய்தந்தைகள்ரூபமாவது- அல்லது இவ்விரண்டு குலங்களில் கொஞ்சம் தூரத்திலிருந்தவர்கள் ரூபமாவது-உண்டாவது வழக்கமாயிருக்கிறது. சிலசிசுக்களுக்குமூக்குந்தகப்பனைப்போலவும் கால்பாட்டனைப்போலவும் இன்னும்சில அவயவங்கள் இன்னும் சிலரைப்போலவும் இருக்கின்றன வென்று சொல்லுகிறார்கள். (தோஹதத்தில்) அதாவது விருக்ஷஜாதிகளின் ஸ்வபாவத்தை அறிந்துபயிருக்கும் வித்தையில ஸமர்த்தரானவர்கள் இரண்டுமரங்களைச்சேர்த்து மூன்றாம்விதமான விருக்ஷத்தை உண்டாக்குகிறார்கள். அந்தமூன்றாம் விதமான விருக்ஷத்தில் அதற்குக்காரணமான இரண்டு செடிகளின் ரூபமும்கலந்திருக்கிறது.

கடைசியில்காரியவர்க்கங்களானசேதனசேதனங்களுக்குகாரணவர்க்கங்களின்ரூபங்கள்உண்டாகின்றன.இதில்ஸகலத்துக்கும்முதற்காரணமானஸர்வேஸ்வரனுக்குபிரமன்முதல் பிபீலிகம்ஈறாகஉள்ளகாரியவர்க்கங்களினுடைய ஸமஸ்தரூபங்களும் உண்டென்றும் அதனால்தான்காரியவர்க்கங்களுக்கு அந்தரூபங்கள் உண்டாயினவென்றும் சொல்வது தகுதியாயிருக்கிறது. ஒவ்வொருரூபமும் ஒவ்வொருநாமத்துடன் கூடியேயிருக்கும். அப்படி ஒவ்வொருநாமமும் ஒவ்வொருரூபத்துடன் கூடியேயிருக்கும். (சசவிஷாணம்) முயற்கொம்பு என்னும்நாமமுண்டு. இதற்கு ரூபமுண்டாவென்று ஆக்ஷேபமுண்டானல் முயல் என்றும் கொம்பு

என்றும் இரண்டுசொற்கள் சேர்ந்து ஒருசொல்லாயிற்று. முயலென்னுஞ்சொல்லுக்கும் கொம்புஎன்னுஞ்சொல்லுக்கும் வெவ்வேறாக ரூபங்கள் உண்டல்லவா. இவ்விரண்டுசொற்களையும் சேர்த்ததுபோல் முயலுக்குகொம்பைஒட்டி இரண்டுரூபங்களையும் சேர்த்தால் முயற்கொம்பு என்னும்பதார்த்தம் கிடைக்கும். கேசவாதிபன்னிரு நாமங்களுக்குப்பன்னிரண்டு ரூபங்கள் உண்டல்லவா. அப்படியே ஆயிரநாமங்களுக்கு ஆயிரம்ரூபங்களுண்டு. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில்(ஸர்வ ச்சர்வ ச்சிவ ஸ்தாணு:) என்றுசிவநாமங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. (நமோஸ்த்வநந்தாயஸஹஸ்ரமூர்த்தயே ஸஹஸ்ரபாதாக்ஷிசிரோருபாஹவே ஸஹஸ்ரநாம்நே) என்று பகவானுக்கு ரூபமாயிரமென்றும் நாமமாயிரமென்றும் பிரம்ஹஸ்துதியில் இருக்கிறது. (அநந்தரூபோநந்தஸ்ரீ:) அதாவதுபகவான் அனந்தரூபகுணங்களை உடையவனென்றும் (ஏகோநைக:) அதாவது பகவான்ஒருவனாய் பலராய் இருப்பனென்றும் விஷ்ணுஸஹஸ்ரநாமத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியே சைவஸித்தாந்தத்திலுங்கண்டுகொள்வது இப்படியிருக்க ஸர்வேஸ்வரனுடைய நாமரூபங்களுக்கு அளவுண்டென்றும் ஸர்வஆஸ்திகமதஸ்தரால் உபாஸிக்கப்படும் ஸமஸ்த நாம ரூபங்கள் பரமாத்மாவுக்கு இல்லையென்றும் வாதிப்பவர்கள் வாதம் பக்ஷபாதவாதமேயல்லது ஸத்யவாதமல்ல. அஸத்தியம் சொல்லக்கூடாதென்று வேதஞ்சொல்லுகிறதல்லவா. ஆகையால் புத்திமான்கள் பக்ஷபாதவாதங்களைத்தவிர்த்து சத்தியத்தில் ஊன்றி யிருக்கை உசிதம்.

இந்தச் சமாதானங்களால் நித்திய விபூதியிலும் லீலாவிபூதியிலும்ஸ்தல விசேஷங்களும் அவ்வஸ்தலங்களிலுள்ளப் பகவன் மூர்த்திவிசேஷங்களும் அவ்வம் மூர்த்திகளுடைய நாம ரூபங்களும் அனந்தங்களென்று யேர்ப்படுகின்றன. வெகுவித நாம ரூபங்களோடு வெகுஸித்தாந்தங்களில் வெகுஜனங்களால் ஆராதிக்கப்படும் பரமாத்மா ஒன்றாயிருக்கிறது. இப்படி யிருக்க வைஷ்ணவக்கிரந்தங்களில் சிவன் ஜீவாத்மாவென்றும் சைவக்கிரந்தங்களில் விஷ்ணு ஜீவாத்மாவென்றும் சொல்லப்பட்டிருக்கிறதற்கு காரணமென்ன வென்றால்-வைஷ்ணவ ஸித்தாந்தப் பிரகாரம் விஷ்ணு ரூபியான பரமாத்மாவால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவகோடியில் சிவனென்று ஒரு ஜீவனுளனென்றும் இவன் விஷ்ணு கடாக்ஷத்தால் சிவ பதத்தை அடைந்தானென்றும் அவ்விஷ்ணு கடாக்ஷத்தாலேயே இனிமோக்ஷத்தை அடைவானென்றும் இவனுக்கு மோக்ஷத்தை அளிக்கும் சக்தியில்லை யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சைவஸித்தாந்தப்பிரகாரம் சிவரூபியான பரமாத்மாவால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவகோடியில் விஷ்ணுவென்னும் ஒரு ஆத்மாவுளனென்றும் அவன் சிவகடாக்ஷத்தால் விஷ்ணு பதத்தை அடைந்தா

னென்றும் அந்த சிவகடாக்ஷத்தாலேயே இனி மோக்ஷத்தை அடைவா னென்றும் இந்த விஷ்ணுவுக்கு மோக்ஷத்தை அளிக்கும் சக்தியில்லை யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

சைவசித்தாந்தத்தில் விஷ்ணு சிவனை ஆயிரம் கமலங்களால் சஹஸ்ர நாமார்ச்சனை செய்யும்போது ஒரு புஷ்பம் குறைந்தப டியால் தன் கண்ணைப்பிடுங்கி அர்ச்சித்தானென்றும்- சிவன் அக் கினிஸ்தம்பமானபோது விஷ்ணு வராஹமாய் அவர் பாதத்தை தேடினானென்றும்- சிவன் நடனம் புரிந்தபோது விஷ்ணு மத் தளமடித்தானென்றும் பிரமஹத்தி தோஷ சாந்திக்காக ராமன் லிங்கார்ச்சனை செய்தானென்றும்-இன்னும் வெகுவிடங்களில் விஷ்ணு சிவனால் வெகுபரிபவங்களை அடைந்தானென்றும் சொல்லியிருக்கிற தென்று வைஷ்ணவர்கள் அசூயைப்படுவதும் அந்தக் கிரந்தங்களைத் தூஷிப்பதும் இந்தக் கதைகள் பொய்யென்பதும் நியாயமல்ல. அந்தக்கதைகளெல்லாம் உண்மைதான். சிவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஜீவாத்ம விஷ்ணு இப்படியெல்லாம் செய்தானென்று சைவபுராணம் சொல்லுகிறதே தவிர வைஷ்ணவர்கள் ஆராதிக்கும் பரமாத்மவிஷ்ணுவைப் பற்றி சைவகிரந்தங்கள் ஒன்றும் சொல்லவில்லை. இப்படியே சிவனுக்கு விஷ்ணுவால் வெகு விதபரிபவங்கள் உண்டாயினவென்று வைஷ்ணவ கிரந்தங்கள் சொல்லுவதற்குச் சைவர்கள் அசூயைப்பட்டு வைஷ்ணவகிரந்தங்களை நிந்திக்க வேண்டியதில்லை. வைஷ்ணவ கிரந்தங்கள் சொல்லுவதும் சத்தியந்தான். விஷ்ணுவால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஜீவாத்ம சிவன் விஷ்ணுவினால் பரிபவிக்கப்பட்டானென்று வைஷ்ணவ கிரந்தங்கள் சொல்லுகிறதேயல்லது சைவர்களாராதிக்கும் பரமாத்ம சிவனைப்பற்றி வைஷ்ணவ கிரந்தங்கள் ஒன்றும் சொல்லவில்லை. இதற்கு ஒரு திருஷ்டாந்தம் உதகரிக்கிறேன். ஒரு வீட்டிற்கு தேவதத்தனென்பவன் யஜமானனாயிருக்கிறான் அவ்வீட்டில் யக்ஞதத்தனென்பவன் சேவகனாயிருக்கிறான். மற்றொரு வீட்டில் யக்ஞதத்தன் யஜமானனாயிருக்கிறான் (இந்த யக்ஞதத்தன் முன்புசொன்ன தேவதத்தனுடைய சேவகனல்ல) இந்த யக்ஞதத்தன் வீட்டில் தேவதத்தனென்றொரு சேவகனுண்டு-(இந்த தேவதத்தன் முன்கூறிய வீட்டு யஜமானனல்ல) இப்படியிருக்க தேவதத்தன் வீட்டு சேவகனை யக்ஞதத்தன் சிக்ஷிக்கப் பட்டால் யக்ஞதத்தன் வீட்டிலுள்ளவர்களுக்கு பரிபவமில்லை. அப்படியே யக்ஞதத்தன் வீட்டில் தேவதத்தனென்னும் சேவகன் சிக்ஷிக் கப்பட்டால் தேவதத்தன் வீட்டிலுள்ளவர்களுக்கு அவமானமல்ல. இவ்விதமாகவே பரமாத்ம சிவன் விஷயமான சைவகிரந்தங்களிலுள் ள ஜீவாத்ம விஷ்ணு பரிபவத்துக்கு வைஷ்ணவர்கள் சோகிக்கவேண் டியதில்லை. பரமாத்ம விஷ்ணுவிஷயமான வைஷ்ணவ கிரந்தங்களி

னுள்ள ஜீவாத்ம பிவபரிபவத்துக்கு சைவர்கள் சோகிக்க வேண்டிய தில்லை. இனிச்சுருக்கிச்சொலலுகிறேன். சர்வஸித்தாந்தங்களிலும் முமு க்ஷுஜனங்கள் வெகுவித நாமரூபங்களால் ஆராதிக்கும் பரமாத்மா ஒன்றாய் அவ்வஸ்ஸித்தாந்தங்களில் தாழ்வாக சொல்லப்பட்டிருக்கும் தேவதைகள் ஜீவாத்மாக்களாய் இருக்கிறார்கள். ஆகையால் புத்திமான் கள் நாமரூப விஷயத்தில் அவ்வளவாய் ஊன்றியிருக்கவேண்டியதில்லை. அவரவர்களுக்கு இஷ்டமான நாம ரூபங்களோடு பரமாத்மாவை ஆ ராதிக்கலாம். பரமாத்ம புத்தியால் செய்யப்படு மாராதனை ஸ்வரூ போசிதமென்றும ஜீவாத்ம புத்தியால் செய்யுமாராதனம் ஸ்வரூபஹா னியென்றும் அவரவர் யெண்ணங்களில் ஊன்றியிருக்கை ஸாதுஜனங் களுக்கு அவசிய கர்த்தவ்யம.

இனி வைஷ்ணவ கிரந்தங்களில் வைஷ்ணவர்களுக்குச்சிற்சில சின் னங்களை விதித்து சைவசின்னங்களை தியாச்சியமென்று சொல்லியிருப் பதற்கும்-சைவகிரந்தங்களில சைவர்களுக்குச் சிற்சில சின்னங்களை வி தித்து வைஷ்ணவசின்னங்கள் தியாச்சியமென்று சொல்லியிருப்பதற் கும் காரணமென்னவென்றால் இதற்கும் ஒருநிதர்சனம் யெழுதுகிறேன்

விஷ்ணு வர்மாவென்றும் சோமவர்மாவென்றும் இரண்டு ராஜ புத்திரர்கள் இருந்தார்கள். இவ்விருவர்க்கும் ஒருகாலத்தில் சரீரத்தில் ஒரேவிதமான வியாதியுண்டாயிற்று. இவ்விருவரும் சிகிச்சைக்காக ஒரு வயித்தியனிடத்திற்குப் போனார்கள். அந்த வயித்தியன் இவ்விருவரு டைய வியாதிஸ்வபாவத்தையும் இவர்களுக்குண்டாயிருக்கும் ஆரோக் கிய அபேக்ஷையையும் தெரிந்துகொண்டு இருவருடைய சரீரஸ்வ பாவத்தையும்அறியும்பொருட்டு நாடியைப்பிடித்து பரீக்ஷிக்க-விஷ்ணுவர் மாவின் சரீரம் உஷ்ணத்தைப்பற்றியும் சோமவர்மாவின் சரீரம் சீதளத் தைப்பற்றியும் இருந்தது. அப்போது வைத்தியன் இருவர்க்கும் வியா தியொன்றாகையால் ஒரே அவுஷதத்தைக் கொடுத்து அவர்கள் சரீரஸ்வ பாவததை அனுஸரித்து அனுபானங்களையும் பத்தியங்களையும் வேறு வேறாக விதித்தான். எப்படி யென்றால் விஷ்ணுவர்மாவின் சரீரம் உஷ்ணத்தைப் பற்றியிருப்பதால் மருந்தை நெய்யில் கலந்து சாப்பிட வேண்டுமென்றும் இதற்கு வெண்டைக்காய் பத்தியமென்றும் கத்தரிக் காய் முறிவென்றும் விதித்தான். சோமவர்மாவின் சரீரம் சீதளத்தைப் பற்றியதாகையால் மருந்தைத் தேனிலே கலந்து சாப்பிடவேண்டுமென் றும் இதற்கு கத்தரிககாய் பத்தியமென்றும் வெண்டைக்காய் முறி வென்றும் விதித்தான். இதேரீதியாய் இங்கு வைஷ்ணவனென்றும் சைவனென்றும் இரண்டு ஆத்மாக்களுண்டானார்கள். இவ்விருவர்க்கும் பவரோகம் உண்டாயிற்று இவ்விருவரும் மோக்ஷமென்னும் ஆரோக்கி யத்தை அபேக்ஷித்து பரமாத்மாவென்னும் வைத்தியனை ஆச்ரயித்தார்கள்.

அந்த பரமாத்மா இவ்விருவருடைய வியாதியையும் ஆரோக்கிய அபேக்ஷையையும் அறிந்துகொண்டு இருவர்க்கும் வியாதி ஒன்ருயி ருப்பதால் ஈச்வரோ பாஸன மென்னும் ஒரே அவுஷதந்தை இருவருக் கும் கொடுத்தான். இனி அனுபான பத்தியங்களை விதிப்பதற்காக நாடி யைப்பிடித்துப் பரீக்ஷித்தான். எப்படியென்ருல் பகவத்கீதையில் அர்ச் சுனன் ஸ்ரீகிருஷ்ணனைப்பார்த்து (கச்சிந்நோபயவிப்ரஷ்டஷ்சிந்நாப்ர மிவநச்யதி அப்ரதிஷ்டோ மஹாபாஹோவிமூடோபிரம்மண:பதி) அதா வது பரமாத்மாநுஸந்தானம் செய்யாமாட்டாதமூடன்கிராச்ரயனுய்க்கர்மக் ஞானங்கள்இரண்டிலும் பிரஷ்டனுய்செதரினமேகம்போல்நசிப்பனல்லவா யென்றுகேட்க (பார்த்தநைவேஹநாமுத்ரவிநாசஸ்தஸ்யவித்யதேநஹி கல்யாணக்ருத்கச்சித்துர்க்கதிம்தாத கச்சதி || ப்ராப்யபுண்யக்ருதாம்லோ காநுஷித்வாசாச்வதீ ஸ்ஸமா: சுசீனும் ஸ்ரீமதாம் கேஹேயோகப் ரஷ்டோபிஜாயதே || அதவாயோகி நாமேவகுலேபவதிதீமதாம் யே தத்திதுர்லபதரம் லோகேஜன்ம யதீத்ருசம் || தத்ரதம்புத்திஸம்யோகம் லபதேபௌர்வதைஹிகம் யததேசததோபூயஸ்ஸம்ஸித்தௌகுருநந்தந) அதாவது பரமாத்மானு சந்தானத்துக்கு யத்தனித்து சாமர்த்தியமில்லா மல் பிரஷ்ட னைவனுக்கு இஹபரலோகங்களில் நாசமில்லை. நன் மைசெய்தவன் ஒருபோதும் துர்க்கதியை யடையான். அவன் புண்ணி யம் செய்தவர்கள் லோகங்களை அடைந்து அங்கே வெகுகாலம் வாசம் செய்து பிறகு ஸதாசாரவான்களான ஸ்ரீமான்கள் வீடுகளில் பிறப்பன் அல்லது நிச்சயபுத்தியுள்ள யோகிகள் குலத்தில் பிறப்பன். லோகத் தில் இப்படிப்பட்ட ஜன்மம் மிகவும் துர்லபம். அப்படிப் பிறந்து பூர்வ ஜன்மத்தில் சம்பாதித்த தத்வத்ரயக்ஞானத்தை மறுபடியடைந்து சித்தி யின்பொருட்டு யத்தனம்செய்வ னென்று பகவான் பகவத்கீதையில்சொல் லி யிருக்கிறபடி பவரோக வைத்தியனைபகவான் இந்தப்பவரோகி களு டைய பூர்வஜன்மவாசனை யென்னும் நாடியைப்பரீக்ஷித்து அனுபான பத் தியங்களை விதித்தான். அதில் வைஷ்ணவனுக்கு ஈஸ்வரோபாசனமென் னும்அவுஷதத்தை விஷ்ணுநாமரூபங்களாகிய அநுபானத்தோடேசேர்த்து ஸ்வீகரிக்கவேண்டுமென்றும் இதற்குப் பத்தியம் ஊர்த்வபுண்ட்ரசங்க சக்ரதாரணாதிகளென்றும் அபத்தியம் த்ரிபுண்ட்ர ருத்ராக்ஷதாரணாதிக ளென்றும் விதித்தான். சைவனுக்கு ஈச்வரோபாசனமென்னும் அவு ஷதத்தைச் சிவனாமரூபங்களாகிய அநுபானத்தோடு சேர்த்து ஸ்வீகரிக் கவேண்டுமென்றும் இதற்குப் பத்தியம் த்ரிபுண்ட்ரருத்ராக்ஷதாரணாதிக ளென்றும் அபத்தியம் ஊர்த்வபுண்ட்ரதப்த சக்ராங்காதிகளென்றும் விதித்தான்.

ஆகையால் விஷ்ணுபக்தர்களுக்கு வைஷ்ணவசின்னங்கள் உபா தேயமென்றும் சைவசின்னங்கள் தியாச்சியமென்றும் சிவபக்தர்க

ளுக்குச் சைவசின்னங்கள் உபாதேயமென்றும் வைஷ்ணவ சின்னங்கள் தியாச்சியமென்றும் நிர்ணீதமாயிற்று. அகண்டஞானவான்கள் பரப்பிரமத்தை நாஞவிதங்களாக உபாசிப்பார்கள். அவ்வவ்வுபாசனத்துக்குத்தக்க சின்னங்களை உபாசனகாலத்தில் பரிக்கிரகிப்பார்கள். சிலர் வைராக்கியமுதலிய ஆந்தரவேஷங்களையே கௌரவித்து பாஹ்யசின்னங்கள் இல்லாமலுமிருப்பார்கள். (வைஷ்ணவம்த்விவிதம் ப்ரோக்தம் பாஹ்யமாப்யந்தரம்ததா பாஹ்யந்து சங்கசக்ராதி ஹ்யாந்தராவிதராகதா) அதாவது ஆந்தர வைஷ்ணவ மென்றும் பாஹ்யவைஷ்ணவ மென்றும் வைஷ்ணவம் இரண்டுவிதம். இதில் சங்கசக்ராதிகளைத் தரிக்கைபாஹ்ய வைஷ்ணவம். வைராக்கியம் ஆந்தர வைஷ்ணவம். இவ்விரண்டில் ஆந்தரவேஷமே முக்கியம். இதையே ஸர்வேசுவரனும் சாதுக்களும் கௌரவிப்பார்கள். ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் யமகிங்கரசம்வாதத்தில் வைஷ்ணவர்கள் எப்படிப்பட்டவர்களென்று கேட்ட கிங்கரர்களைப்பார்த்து யமன் ஆந்தரவேஷத்தை விஸ்தாரமாக சொன்னனேயல்லது பாஹ்யவேஷத்தில ஒன்றையாகிலும் சொல்லவில்லை. இதரஸித்தாந்தங்களிலும் இப்படியே ஆந்தரவேஷமே மிகவும் கௌரவிக்கப்பட்டிருக்கிறது. (சக்ராதிதாரணம் பும்ஸாம் பரசம்பந்த வேதநம் பதிவ்ரதா நிமித்தம் ஹிவலயாதிவிபூஷணம்) என்கிறபடியே பதிவ்ரதைக்கு வளையல்முதலான பாஹ்யவேஷங்களைப்போல் வைஷ்ணவனுக்கு சக்ராதிதாரணம் விஷ்ணுசம்பந்த பிரகாசகமாத்திரமே யல்லது ஆந்தரவேஷத்தைப்போல் முக்கியமல்ல. (நஜாதிபேதம் நகுலம் நலிங்கம் நகுணக்ரியா: நதேசகாலௌ நாவஸ்தாம் யோகோஹ்யயமபேக்ஷதே) அதாவதுப்ரபத்தியோகம்-ஜாதிபேதங்களையும் குலத்தையுமசின்னங்களையும்குணக்ரியைகளையும் தேசகாலாவஸ்தைகளையும்அபேக்ஷியாதென்று பாரத்வாஜஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறது. சிலவிடங்களில்பாஹ்யவேஷம்கொண்டாடப் பட்டிருந்தபோதிலும் அதுப்ரசம்ஸாபரமென்று புத்திமான்கள் ஊஹிக்கவேண்டும். பராசரஸ்மிருதியில் (அக்நிதப்தேநசக்ரேண பாஹுமூலேதுலாஞ்சிதா: தேயாந்திபரமம் ஸ்தாநம்புநராவர்த்திவர்ஜிதம்) அதாவது பாஹுமூலத்தில் தப்தசக்ராங்கனத்தை உடையவர்கள் மீட்சியில்லாத பரமபதத்தை அடைவார்களென்றுசொல்லியிருக்கிறது. இப்படியே இன்னும்சிலவிடங்களில் சங்கசக்ரஊர்த்வபுண்ட்ரதுலஸீநளினுக்ஷ மாலாதாரணங்களை மிகவும்கௌரவித்துச்சொல்லியிருக்கிறது. சைவஸித்தாந்தத்திலும் பாஹ்யசின்னங்களை கௌரவித்துச்சிலவிடங்களில் சொல்லியிருக்கிறது. இந்தவசனங்கள் ப்ரசம்ஸாபரமென்று அங்கீகரியாமல் நிஜமென்றுசொன்னல் வெகுப்ரமாதத்துக்கு இடமாகும். எப்படியென்றால் பாஹ்யசின்னங்களை கௌரவித்துச்சிலப்ரமாணங்களும் அதுமுக்கியமல்லவென்று சிலபிரமாணங்களும் சொல்லுகிறபடியால் இ

தவாக்கியங்களுக்கு பரஸ்பரவிரோதமில்லாமல் அர்த்தம்நிர்வகிக்கவேண்டும். அப்படிச்செய்யாவிடில் அவ்வாக்கியங்கள் பித்தர்பிதற்றலாகும். பாஹ்யசின்னங்களைமாத்திரம்தரித்து மஹாபாதகங்களை செய்யுமவர்களுக்குமோக்ஷப்ராப்தி தப்பாதென்று சொல்லவேண்டிவரும். அஜகரமுனி முதலானபரமயோகிகள் பாஹ்யசின்னங்கள் இல்லாமலிருந்தார்களென்றுபிரமாணங்கள் சொல்லுகிறது. இந்தபாஹ்யசின்னங்களைத்தரித்திருந்த சிலர் நிஷித்தாநுஷ்டானங்களாலே நரகத்தை அடைந்தார்களென்றும் சொல்லியிருக்கிறது. இந்தசமாதானங்களால் பாஹ்யவேஷத்தைக் கௌரவிக்கும்வசனங்கள்ப்ரசம்ஸாபரமென்பதற்குச்சந்தேகமில்லை. ஆகையால் சிலபூர்ணாதிகாரிகள் பாஹ்யவேஷத்தை அவ்வளவாய் கௌரவிக்கமாட்டார்கள். ததீயருக்கு(ஈஸ்வரசம்பந்திகளுக்கு) முக்கியலக்ஷணமானவைராக்கியமுதலானஆந்தரவேஷங்களைபரீக்ஷித்து அறிகைமிகவுமஸாத்தியம் உபதேச அநுவர்த்தநாதிகளுக்குஇவ்வளவுபரீக்ஷைவேண்டுமேயல்லதுசத்காரமாத்திரத்துக்கு அவ்வளவுநிர்பந்தமில்லை. பகவத்விபூதியான சேதனரெல்லாரையும் ததீயரென்றுநினைத்துச் சத்கரிக்கவேண்டும். ராஜபுத்திரன்பித்தனாய்த்தன்னையும்தன்மாதாபிதாக்களையும் மறந்திருந்தபோதிலும் லோகத்தார்அவனை ராஜபுத்திரனென்று கௌரவிக்குமாறுபோல ஈச்வரஸம்பந்தமானசேதனர்களில் சிலர் தம்ஸ்வரூபத்தையும் ஈச்வரஸ்வரூபத்தையும்மறந்து விவேகசூன்யராய் இருந்தபோதிலும் அவர்களைஅகௌரவிக்காமல் ததீயரென்னும்நினைவால் ஸத்கரிக்கைஉசிதம். இப்படிப்பட்டகம்பீரமான எண்ணமுள்ளவர்களுக்கு ஸர்வேச்வரன்வசவர்த்தியாய்இருப்பனென்பதற்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை. நிரந்தரபகவத்த்யானத்தில்மனம்லயிக்காதவர்கள்பாஹ்ய சின்னங்களைத்தரிக்கும்போது அந்தச்சின்னங்களுக்குவிதிக்கப்பட்டிருக்கிற மந்திரங்களை உச்சரித்துக்கொண்டும்- அம்மந்திரங்களின் அர்த்தத்தைமனனம்செய்துகொண்டும்- மந்திரங்களின் அதிதேவதைகளைத் த்யானம்செய்துகொண்டும் இருப்பதினால் நாளாவர்த்தியில் நிரந்தரத்யானநிஷ்டையையும் வைராக்கியாதி ஆந்தரவேஷத்தையும் உண்டாக்கிபின்பு மோக்ஷத்தைக்கொடுக்குமென்பதே பாஹ்யசின்னங்கள்மோக்ஷப்ரதங்களென்னும் பிரமாணங்களுக்கு முக்கியமானகருத்தாகும்.

சிலர்ஒன்றை மற்றொன்றாகப்ரமிக்கிறவர்களுக்கு நினைத்தபலம்கைகூடாதென்றும் ஒருவன்புளியங்கிளையென்றுநம்பி முருங்கக்கிளையைப்பிடித்துக்கொண்டுதொங்கினால் அந்தக்கிளைமுறிந்து இவன்பூமியில்விழுவானேயல்லது இவன் நம்பிக்கைக்காக அந்தமுருங்கக்கிளை புளியங்கிளையாய் ரக்ஷிக்கமாட்டாதென்றும் அப்படியே ஜீவாத்மாவைப் பரமாத்மாவென்றுப்ரமித்து ஆச்ரயித்தால் பரமாத்மாவால் சித்திக்கவேண்டியமோக்ஷபலம் சித்திக்கமாட்டாதென்றும் சொல்லுவார்கள். இதற்குச்சமா

தானம் எழுதப்படுகிறது. இவன்நம்பியபுளியங்கிளை அசேதனமாகையால் இவன்நம்பிக்கைவ்யர்த்தமாயிற்று-அந்தப்புளியங்கிளைக்கு ஸர்வேசுவரனைப்போல் ஸர்வக்ஞத்வ ஸர்வசக்தித்வங்கள் இல்லாமையால் இவன் விச்வாஸத்தை அறிகைக்கும் இவன்பிடித்த முருங்கக்கிளையிலே ஆவேசித்துரக்ஷிக்கைக்கும் அவகாசம்இல்லாமல் போயிற்று. ஒருவன்பரமாத்மபுத்தியால் மற்றொருவஸ்துவை ஆஸ்ரயித்தாலும்அந்தப்பரமாத்மா ஸர்வக்ஞத்வஸர்வசக்தித்வவிசிஷ்டனாகையால் இவன்அத்யவஸாயத்தைஅறிந்துஇவனாச்ரயித்தவஸ்துவில்ஆவேசித்துஇவன்அபீஷ்டத்தைக்கொடுப்பான். இதற்குஒருநிதர்சனம் எழுதுகிறேன். ஏகலவ்யனென்னும்வேடனொருவன் துரோணாசாரியாரைத் தநுர்வித்தைக்காக ஆச்ரயிக்கஅவர் சம்மதிக்காதபடியால் அந்த ஏகலவ்யன் காட்டில் நிர்மானுஷ்ய ஸ்தலத்தில் துரோணரைப்போன்ற பிரதிமையைச்செய்து வைத்துக்கொண்டு பக்திசெய்தவளவில் இவனுக்குத்துரோணாசாரியரால்அர்ச்சுனனுக்குக்கிடைத்த தநுர்வித்யா விசேஷங்களெல்லாம்லபித்தது. இந்தஏகலவ்யனுக்குத்துரோணரும்துரோணரூபப்பிரதிமையும் உபதேசிக்கவில்லை. இவன் ஆசார்யபக்திசெய்தபடியால் ஜகதாசார்யனும் சர்வகுருபரம்பரைகளுக்குப்பிரதமாசார்யனுமான ஸர்வேசுவரன்இவன்பக்திக்குக் கருணைகூர்ந்து துரோணரூபப் பிரதிமையில் ஆவேசித்து இவனபீஷ்டத்தைநிறைவேற்றினான்ஆகையால்பரமாத்மபுத்தியுடன் எந்தப்பதார்த்தத்தை ஆச்ரயித்தாலும்ஸர்வக்ஞத்வஸர்வசக்தித்வயுக்தனான ஜகந்நாதன்இவன்இருதயத்தை அறிந்துஇவனாச்ரயித்தவஸ்துவில்ஆவேசித்துஇவன்மனோரதத்தை நிறைவேற்றுவனென்பதற்குச் சந்தேகமில்லை.

பின்னும் அண்டத்திலுள்ளயாவும் பிண்டத்திலும் உண்டென்றும் மனுஷ்யசரீரத்தில் அனந்தாத்மாக்களிருக்கின்றனவென்றும் இந்தமனுஷ்யசரீரத்தில்சிரசு சத்தியலோகமென்றும் நாபிப்பிரதேசம் பூலோகமென்றும் பாதங்கள் பாதாளலோகமென்றும் இவற்றின்நடுவில் மற்றலோகங்களிருக்கின்றனவென்றும் இந்தச்சமாதானத்தால்ப [illegible] தசபுவனங்களோடு கூடிய அண்டமாகுமென்றும் பிரம்மாண்டத்திலுள்ளதேவர்களெல்லோரும் இந்தப்பிண்டாண்டத்திலிருக்கிறார் [illegible] புராணத்தில்பகவான் சொல்லியிருக்கிறான். பகவத்கீ [illegible] காசஸ்திதோநித்யம் வாயுஸ்ஸர்வத்ரகோ மஹாந்ததா ஸர்வாணி பூதாம மத்ஸாநீத்யுபதாரய) அதாவது எங்கும்வியாபித்திருக்கும் வாயுவானது ஆகாசத்தில் அடங்கியிருக்குமாப்போல் சமஸ்தபூத பிரபஞ்சங்கள் என்னிடத்தில் இருக்கின்றன வென்றுபகவான் சொல்லியிருக்கின்றான். ஆகையால் ஒவ்வொருபதார்த்தத்திலும் தத்வத்ரயம் மிச்ரமாயிருக்கின்றது. நெல்லிக்கனியினுடைய புளிப்பினால்வாயுவும் துவர்ப்பினால் சிலேஷ்மமும் மதுரத்தினால் பித்தமும் நசிக்குமாகையால் இம்மூன்று விதமான

ஆரோக்கியங்களை விரும்புவோர்கள் அந்தக்கனியைப்பரிக்ஷிக்குமாப் போலத்தத்வத்ரயத்தின் கலப்பானஒவ்வொருபதார்த்தத்திலும் அவரவர் கோரிக்கைப்பிரகாரம்எந்தத்தத்துவத்தையாகிலும் கௌரவிக்கலாம்.எப்படிஎன்றால்விஷ்ணுஆலயத்திலிருக்கும் விஷ்ணுபிம்பத்தைவைஷ்ணவன் பரமாத்மாவென்றும் சைவன்ஜீவாத்மாவென்றும் பரப்ரம்ஹம்நாமரூபரஹிதமானதென்று அபிப்பிராயப்பட்டவன் அசித்தென்றும் அத்யவஸிப்பார்கள். சிவாலயத்திலிருக்கும் சிவபிம்பத்தைச்சைவன்பரமாத்மாவென்றும் வைஷ்ணவன் ஜீவாத்மாவென்றும் நாமரூப ரஹிதபரமாத்மோபாஸகன் அசித்தென்றும் அத்யவஸிப்பார்கள். ஸர்வபதார்த்தங்களும் தத்வத்ரயாத்மகமாகையால் ஒவ்வொருவருடைய அத்யவஸாயமும் உசிதமாகவேயிருக்கிறது. ஒருபுருஷன் தன்பாட்டனுக்குப் பேரனாய் த்தகப்பனுக்குப் பிள்ளையாய்த் தமயனுக்குத்தம்பியாய்த் தம்பிக்குத்தமயனாய் மனைவிக்கு பர்த்தாவாய்ப் பிள்ளைக்குத்தகப்பனாய்ப்பேரனுக்குப்பாட்டனாய் எஜமானனுக்குச்சேவகனாய்ச் சேவகனுக்குஎஜமானனாய்த்தோழனுக்குத்தோழனாய்ச்சத்துருவுக்குச்சத்துருவாய்க் கொடுப்போனுக்குக்கொள்பவனாய்கொள்பவனுக்குக்கொடுப்போனுமிருக்கிறான். இத்தனை தர்மங்கள் ஒருவனிடத்திலிருக்கிறபடியால் ஒருவனே யெல்லாருக்கும் அத்தனைவிதங்களாயிருக்கிறான். தத்வத்தைவிசாரிக்கும்போது அந்தப்புருஷனுக்கு அவரவர் அத்யவஸாயப்படி அவ்வப்பேர்கள் தகுந்திருக்கின்றனவேயல்லது பேரன் குமாரன்- தம்பி- தமயன்- கணவன்- தகப்பன்- பாட்டன்-சேவகன்- எஜமானன்- தோழன்- சத்துரு- கொள்வோன்- கொடுப்போன் என்னுமிப்பேர்களில் ஒன்றாவது அந்தப்புருஷனுக்கு ரூடிநாமமல்ல. அப்படியே ஒவ்வொரு பதார்த்தத்திலும் மூன்றுதத்வங்களும் கலந்திருக்கிறபடியால் இம்மூன்றுதத்வங்களினுடைய தருமங்களுடன் கூடியிருக்கும பதார்த்தத்தைஅவரவர் அத்யவஸாயப்படி அவ்வப்போர்களால் வ்யவஹரிக்கை உசிதம். கடைசியில் அந்தப் பதார்த்தம் கேவலபரமாத்மாவும கேவலஜீவாத்மாவும் கேவலஅசித்தும்அல்ல. மூன்றினுடையகலப்பாகையால்அவரவர்க்கு அவரவரால் அத்யவஸிக்கப்படும்தத்வதருமம்அந்தப் பதார்த்தத்தில் பிரகாஸிதமக் கொண்டிருக்கும். அகண்டஞானபரிபூர்ணர்கள் எங்கும்எல்லாமுண்டென்று அத்யவஸிக்கிறார்கள்.

சிலர்நாமரூபங்களில்லாமலே பரமாத்மாவைஉபாஸிப்பார்கள். அப்படிநாமரூபரஹித கேவலபரமாத்மோபாஸகம் செய்பவர்களில் சிலர்அநாமியும் அரூபியுமான பகவானுக்கு நாமரூபங்களைக்கற்பித்து "உபாஸிக்கை அநீதியென்று ஸவிக்ரகோபாஸகரை கர்ஹிக்கிறார்கள். அதுவும்நியாயமல்ல. எங்கும்நிறைந்திருக்கிறபரமாத்மா இவனுத்தேசித்தவிக்ரஹத்தில் மாத்திரம் இல்லாமற்போயிற்றா. சிலர்அவுஷதத்தைச் சிரத்தையுடன் ஸ்வீகரிப்பார்கள். அப்படிஸ்வீகரிக்கச்சகியாதவர்கள்அவர்களுக்கிஷ்டமா

ன பதார்த்தங்களில் அம்மருந்தைக்கலந்து புசிக்குமாப்போல் கேவலபரமாத்மாவைஸாந்நித்யம் செய்துகொள்ளச் சக்தியில்லாதவர்கள்நாமரூபவிசிஷ்டமாய்ப்பரமாத்மாவை உபாஸிக்கிறார்கள். பஞ்சீகரணத்தால்எங்கும் ஸூக்ஷ்மரூபியாய் வியாபித்திருக்கும் அக்னியைப் பரமயோகிகள் இச்சாமாத்திரத்தால் ஸாந்நித்யம் செய்துகொள்ளுவார்கள். அவ்வளவு சக்தியில்லாதவர்கள் அரணியைக்கடைந்து அக்னியைப்பெறுவார்கள். அப்படியே தாரணைதிடப்பட்டவர்கள் கேவலபரமாத்மோபாஸனம்செய்வார்கள். தாரணைதிடப்படாதவர்கள் விக்ரகவிசிஷ்டமாய் உபாஸிப்பார்கள். ஸர்வதேசஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும்பகவானிடத்தில் அவிச்சின்னமானஸ்மரணை உண்டாயிருக்கை தாரணையென்னப்படும். ஆகையால்இவ்விரண்டுபிரகாரங்களும்அவரவர் அதிகாரானுகுணமாக அவரவர்க்குஉசிதமாயிருக்கிறது. மேலும்ராஜபரிக்ரகமானபதார்த்தங்கள் பிரஜைகளுக்குபூஜ்யங்களாமாப்போலே தாரணைதிடப்பட்டவர்களும் தங்களுக்குஸவிக்ரகோபாசனம் அனுவச்யகமானபோதிலும் (நதேரூபம்நசாகாரம் நாயுதாநி நசாஸ்பதம் ததாபிபுருஷாகாரோ பக்தாநாம்த்வம்ப்ரகாசஸே) என்றுகிலருக்கிலேசொல்லியிருக்கும் ரீதியாய் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்காகமாதாவானவள் அவுஷதஸேவை செய்யுமாப்போல் நாமரூபாஹிதனானபரமாத்மாபக்தர்களுக்காகப் பரிக்ரஹித்ததென்று அவ்விக்கிரகத்தைக் கௌரவிப்பார்கள். ஆகையால்எவ்விதத்தாலாகிலும் பரமாத்மோபாஸனமேமுக்கியமேயல்லது அவிக்ரக ஸவிக்ரக ரூபவிஷயங்களில் மாற்சரியப்படுவது உசிதமல்ல.

பக்தவிஜயத்தில் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கும் பக்தர்களில்சிலர் தாழ்ந்தகுலங்களில் பிறந்தவர்களென்று அவர்களைச்சிலர் அகௌரவமாகவெண்ணுவார்கள். அந்தஎண்ணம் நரகஹேதுவாய்ப் பகவன்னிக்ரகத்துக்குக் காரணமாயிருப்பதால் அவ்விஷயமாய் இங்குக் கொஞ்சமெழுதப்படுகிறது.

ஜீவாத்மாக்களுக்கு ஜாதிபேதமில்லை. இவ்வாத்மாக்கள் க்ஞானாநந்த ஸ்வரூபமாய் க்ஞானகுணகமாய் அந்யோந்யபேதமில்லாமல் ஒருபடியாயிருக்கும். ஜாதிபேதங்கள் சரீரத்தைப்பற்றி யிருக்கும். ஆத்மாக்களுக்கு சமம் தமம் முதலான ஆத்மகுணங்களால் பகவானுடையஅங்கீகாரமுண்டாகுமேயல்லது ஜாதியினாலல்ல. ஸ்ரீமஹாபாரதத்தில் ஆரண்யபர்வத்தில் (ப்ராம்ஹண: கோபவேத்ராஜந்) பிராமணன் எப்படிப்பட்டவன்என்றுகேட்ட அஜகரத்தை (மலைப்பாம்பை) ப்பார்த்து(ஸத்யம்தாநம்சமாசீலம் ஆந்ருசம்ஸ்யம்தபோக்ருணா | த்ருச்யந்தேயத்ரநாகேந்த்ரஸப்ராம்ஹணஇதிஸ்ம்ருத: சூத்ரே துயத்பவேல்லக்ஷ்ம த்விஜேதச்ச நவித்யதே நவைசூத்ரோபவேச்சூத்ர: பிராம்மணோநசப்ராம்ஹண:) அதாவது ஸத்யம் தாநம் சமம் சீலம் ஆந்ருசம்ஸ்யம் தபம் தயை ஆகியஇக்குணங்கள்

எவனிடத்திலிருக்கின்றனவோ அவனே பிராம்ஹணனுவான். இக்குணங்கள்சூத்திரனிடத்திலிருந்தால் அவன்சூத்திரனல்லன் பிராம்மணனிடத்தில் இக்குணங்களில்லாவிடில் அவன்பிராமணனல்லன்என்றுதர்மபுத்திரர் சொன்னுர். (நாஹம்தேவோநமர்த்யோவா நதிர்யக்ஸ்தாவரோபிவா க்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா சேஷோஹிபரமாத்மந:) அதாவது நான்தேவனும்மனிதனும் மிருகமும் மரமும் அல்லேன் ஞானம் ஆனந்தமே வடிவாக உடைய ஆத்மாவாகிறேன் இப்படிப்பட்ட நான் பரமாத்மாவுக்கு சேஷமாயிருக்கிறேன் என்று பரமயோகியான ஜடபரதர் சொன்னுர். (நாஹம் விப்ரோநசநரபதிர்நாபிவைச் யோநசூத்ர: நோவாவர்ணீ நசக்ருஹபதிர்ணுவாநஸ்தோயதிர்வா கிந்துஸ்ரீமத்புவந பவநஸ்தித்யபாயைகஹேதோ: லக்ஷ்மீபர்துர் நரஹரிதநோர் தாஸதாஸஸ்யதாஸ:) அதாவதுநான்பிராமணனும் க்ஷத்திரியனும் வைசியனும் சூத்திரனும் பிரம்ஹசாரியும்கிருஹஸ்தனும் வானப்பிரஹஸ்தனும் சந்நியாசியுமல்லேன். சகலலோகங்களினுடைய படைப்பு அளிப்பு அழிப்பு இவைகளுக்கு ஹேதுவாய்இலக்குமிமணுளனுய் நரசிங்கரூபியான பகவானுடைய தாஸனுடைய தாஸனுக்கு தாஸனுவேன் என்றுபகவானுக்கு அந்தரங்கபக்தரான பிரகலாதர் சொன்னுர். இம்மூன்றுசுலோகங்களால் தேவதிர்யங்மனுஷ்ய ஸ்தாவரங்கள்ப்ராம்ஹண க்ஷத்திரிய வைச்ய சூத்திரர் பிரமசாரிகிரகஸ்தவானப்ரஸ்தஸந்நியாசிகள்என்னும்பேதங்கள் ஜீவாத்மாக்களுக்கு கர்மானுகுணமாகஉண்டாயிருக்கும் கவசரூபசரீரங்களுக்கேயல்லது ஆத்மாவுக்கு இல்லையென்றும் இவ்வாத்மா க்ஞானனந்தஸ்வரூபமாய் ஸத்வாதிசுகுணங்களையும்பகவத்பாகவத சேஷத்வத்தையும் முக்கியநிரூபகமாக உடைத்தாயிருக்குமென்றும்தாத்பரியம். ஸ்ரீவிதுரருடைய நிர்யாணகாலத்தில் அவர்சரீரத்துக்குஅக்கினிஸம்ஸ்காரம் செய்யயத்தனித்த தர்மபுத்திரரைப் பார்த்து அசரீரியானபகவான் (போபோராஜந் நதக்தவ்யம் யேதத்விது ரசஜ்ஞிகம் களேபரமிஹைதத் தேநைஷதர்மஸ்ஸநாதந: லோகவைலக்ஷணேநாம பவிஷ்யத்யஸ்ய பார்த்திவ யதிதர்மமவாப்தோ ஸௌநசோசபரந்தப) அதாவது ஓராஜாவே இவ்விதுரர்சரீரத்தை தகனம்செய்யவேண்டாம் யதிதர்மத்துடன் கூடியிருந்த இவர்விஷயத்தில் லோகவிலக்ஷணமாய்நடத்தவேண்டும். இப்படிப்பட்ட பரமஹம்ஸையின் சரீரத்தைத்தகனம்செய்கைபழமையானதர்மமல்ல சோகிக்கவேண்டாம் என்றுசொன்னுன். (கச்சித்விஜாதிப்ரவரோ வேதாத்யாயீதபோதந: தபஸ்வீதர்மசீலச்ச கௌசிகோநாமபாரத சாங்கோபநிஷதாந் வேதாந் அதீதேத்விஜஸத்தம:)என்கிறபடியேபிராமணேத்தமனுய் வேதாத்யயனம் செய்தவனுய் தவத்தையேதனமாக உடையவனுய்த் தபோநிஷ்டனுய்த் தர்மசீலனுய் அங்கங்களுடன்உபநிஷத்துக்களை அத்யயநம்செய்தவனுய்இருந்தகௌசிகனென்னும்ரிஷிதர்மவ்யாதனென்னும் கிராதகனே அநுவர்த்தித்துத்தர்மசந்தேகங்களைத்

தீர்த்துக்கொண்டானென்று ஸ்ரீமஹாபாரதத்தில் ஆரணியபருவத்தில்
சொல்லப்பட்டிருக்கிறது. நைமிசாரணியத்தில் வாஸம்செய்யும்மகரிஷிகள்
தாங்கள்செய்யும்தீர்க்கஸத்திரயாகத்தில் பிரதிலோமஜாதியில் பிறந்தரோம
ஹர்ஷணனுக்குப் பிரம்ஹாஸநம் கொடுத்தார்களென்று ஸ்ரீபாகவதத்தில்
தசமஸ்கந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சமஜாதியில்பிறந்தஒருபா
கவதோத்தமன் பிராமணனுக்கு யாகத்தில்கிரியாலோபமுண்டாய் சூல
தோஷத்தால் நேர்ந்தபிரமராக்ஷஸ்ஸ ரூபத்தைத்தான்பகவானைத்துதித்த
கைசிகமென்னும் பாட்டின்பலத்தைக் கொடுத்துவிடுவித்தானென்று வரா
ஹபுராணத்தில் பகவான்பூதேவிக்குச் சொன்னான். ஸ்ரீமஹாபாரதத்தில்
(மத்பக்தம்சூத்ரஸாமாந்யா தவமந்யந்தியேநரா: நரகேஷ்வவதிஷ்டந்திவர்
ஷகோடிர்நராதமா: சண்டாலமபிமத்பகதம்நாவமந்யேதபுத்திமான் அவ
மாநாத்பதத்யேவரௌரவேநரகேசஸ:) அதாவது என்பக்தனை ஸாமாந்
யசூத்திரனாகநினைத்து அவமானிக்கும் நராதமர்கள் கோடிவருஷம்நரகத்
தில் கிடப்பார்களென்றும் என்பக்தன் சண்டாளனாகிலும் அவனைப்புத்தி
மான்அவமானிக்கக்கூடாது. அப்படி அவமானித்தால் ரௌரவநரகத்தில்
விழுவனென்றும் (நசூத்ராபகவத்பக்தா விப்ராபாகவதாஸ்ம்ருதா: ஸர்வவர்
ணேஷு தேசூத்ரா யேஹ்யபக்தாஜநார்தனே) அதாவது பகவத்பக்தன்
சூத்திரனல்லனென்றும் அவனைவிப்ரனென்றும் பாகவதனென்றும் நினைக்
கவேண்டுமென்றும் எல்லாஜாதிகளிலும் பகவத்பக்தரல்லாதார் சூத்திர
ரென்றும் (பக்திரஷ்டவிதாஹ்யேஷாயஸ்மின் ம்லேச்சேபிவர்த்தே ஸவிப்
ரேந்த்ரோமுநிஸ்ரீமாந் ஸயதிஸ்ஸசபண்டித: தஸ்மைதேயம்ததோக்ராஹ்
யம் ஸசபூஜ்யோயதாஹ்யஹம்) அதாவது அஷ்டவிதபக்திகள் மிலேச்சனி
டத்தில் இருந்தாலும்அவனே பிராம்மணோத்தமன் அவனேமுநி அவனே ஸ்ரீ
மான்அவனேயதிஅவனேபண்டிதன் அவனுக்குஉபதேசிக்கையும்அவனால்
உபதேசம்பெறுகையும்தகுதியானது. அவன்என்னைப்போல்பூசிக்கப்படத்
தக்கவன்என்றுவெகுவிடங்களில் பாகவதவைபவத்தை பகவான்தானே
வெளிப்படுத்தினன் (மத்பக்தம்ஸ்வபசம் வாபிநிந்தாம்குர்வந்திஏநரா: பத்
மகோடிஸதேநாபிநக்ஷமாமிவசுந்தரே) அதாவதுஓபூதேவி என்பக்தன்நாய்
மாம்ஸத்தைஉண்பதை இயற்கையாகஉடைய நீசஜாதியில்பிறந்தவனை
போதிலும் அவனைநிந்திக்கும் மனிதரைப் பத்மகோடி சதவருஷங்களான
போதிலும்நான்க்ஷமிக்கமாட்டேனென்றுவராஹபுராணத்தில்பகவான்அரு
ளிச்செய்தான்.(ச்வபசோபிமஹீபாலவிஷ்ணுபக்தோத்விஜாதிக: விஷ்ணுப
க்திவிஹீநஸ்துயதிச்சச்வபசாதம:) அதாவதுநாய்மாம்ஸத்தைஉண்ணும்நீச
ஜாதியில் பிறந்தவனானபோதிலும் பகவத்பக்தன் பிராமணனைக்காட்டி
லும்உயர்ந்தவனென்றும் பகவத்பக்திஇல்லாதவன் ஸந்நியாசியானபோதி
லும்நாய்மாம்ஸத்தை உண்பவனிலும் அதமனென்றும் ஸ்ரீபாகவதம்செப்பு
கிறது. (யஃபச்யதிசுபாசாரம் வைஷ்ணவம் வீதகல்மஷம் யஸ்மிந்கஸ்மின்

குலேஜாதம் ப்ரணமே தண்டவத்புவி) அதாவது குற்றமின்றிலதா சாரவானும் ஈச்வர வியாப்திமை ஸதா அனுஸந்தானம் செய்வதால் வைஷ்ணவனென்று சொல்லப்படும் பகவத்பக்தனைப் பார்த்தவளவில் அவன் எக்குலத்திற் பிறந்தவனானாலும் அவனுக்கு அடியற்ற மரம்போல் பிரணாமம் செய்ய வேண்டுமென்று லிங்கபுராணம் சொல்லுகிறது. இன்னும் பலபிரமாணங்கள் இருந்தபோதிலும் கிரந்தவிஸ்தார பயத்தால் எழுதவில்லை. இந்தப்பிரமாணங்களைச் செவ்வையாய்யோசித்தால் பகவத் பக்தருக்குக் குணம்முக்கியமேயல்லது ஜாதிமுக்கியமல்லவென்று விளங்குகிறது. ஆகையால் பக்தவிஜயத்தில் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கும் பக்தர்கள்எக்குலத்தோராயினும் வணங்கப்படத் தக்கவரென்பதற்கு ஐயமில்லை.

இவ்வம்சங்களை யெல்லாம் தீர்க்கமாய் விசாரித்து ஸர்வ ஸித்தாந்தங்களிலுமுள்ள முமுக்ஷுக்களுக்குப் பரமாந்மபாவத்தால் உபாஸ்யமான பரப்பிர்மம் ஒன்றென்றும்- அவ்வச்சித்தாந்தங்களில் நிகர்ஷமாகச் சொல்லப்பட்டிருக்கும் தேவதைகள் ஜீவாத்மாக்களென்றும்- நாம்கண்டும் கேட்டும் காணாமலும் கேளாமலும் இருக்கும் ரூபநாமங்களெல்லாம் பரமாத்மாவுகுண்டென்றும்- அத்தனைநாமரூபங்களும் ஜீவாத்மாக்களுக்கும் அவரவர் யோக்யதானுசாரமாக உண்டாயிருக்கிறதென்றும்- யெங்கும் தத்வத்ரயம் கலந்திருக்கிறபடியால் உபாஸகர்மனோரதப்படி ஜீவாத்மபரமாத்மாக்களின் ஸாந்நித்யம் ஸித்திக்குமென்றும்- அவரவர் உபாஸநானுகுணமாக ஜீவாத்ம பரமாத்மாக்களை நிச்சயிக்கவேண்டுமேயல்லது நாமரூபமாத்திரத்தாலேயே ஜீவாத்மபரமாத்மநிச்சயம் செய்கை அசாத்தியமென்றும்- அவ்வவ்வுபாஸனைகளுக்குத் தக்கபடி அவ்வச்சித்தாந்தங்களில் விதிக்கப் பட்டசின்னங்களைத் தரிப்பதுஅவரவர்க்குஉசிதமென்றும்- பாஹ்யசின்னங்களைத் தரித்திருப்பதினாலேயே யோக்யரென்றும்- அவையில்லாமையினால் அயோக்கியரென்றும்- நிச்சயிக்கை உசிதமல்லவென்றும்- அவரவர் க்ஞானநுஷ்டானங்களைச் செவ்வையாய்ப்பரீக்ஷித்துஅவரவர் யோக்கியதையைதெரிந்துகொண்டுஅயோக்கியர் ஸாங்கத்யஸல்லாபங்களைப் பற்றறவிட்டுக்ஞானமும்விரக்தியும்சாந்தியும் உடையனாயிருக்கும் பரமஸாத்விகனோடே ஸகவாஸஸல்லாபங்கள்செய்யவேண்டுமென்றும்-பகவத்பக்தருடையயோக்கியதையைப்பார்த்துக் கௌரவிக்கவேண்டுமேயல்லது ஜாதியைப்பார்த்துக்கௌரவிக்கை பிரமாதஹேதுவென்றும் நிச்சயித்துப்-புத்திமான்கள் ஈச்வரவிபூதியான சேதனசேதனங்களில் விரோதத்தைவிட்டுப் பாகவதாபசாரத்துக்கு அஞ்சி அன்யோன்யம் சினேகத்தை த்ருடமாய்ப்பற்றி ஸர்வாத்மாக்களிலும் ஸஹோதரபாவம் செய்துகொண்டும்- பகவத்பக்தரானமுமுக்ஷுக்களுடன் சேர்ந்து பொழுதுபோக்கிக்கொண்டும்- அப்படிப்பட்ட ஸகவாஸம் ஸித்திக்காதபோது ஏகாந்த ஸ்தலத்தில் வஸித்துப் பகவத்தியானம் செய்துகொண்டும்- மோக்ஷத்தை விரும்பாதவர்களுக்கு மோக்ஷகாரணமாக க்ஞா

ணத்தை உபதேசித்துக்கொண்டும்-ஆசாரஹீனருக்குத் தம்முடையஉபதேச அனுஷ்டானங்களால் ஆன்றுசம்ஸ்யம்முதலான ஸதாசாரங்களை உண்டாக்கிக்கொண்டும்- பலியாதவிடங்களில் அனுதாபயுக்தராய் அவர்களுக்காகப்பகவானைப்பிரார்த்தித்துக்கொண்டும்- ஸர்வபிராணிகளுக்கும்கூடியவரையில்நன்மை செய்துகொண்டும்- தங்களுக்குத்தீங்கு செய்யுமவர்களை த்வேஷிக்காமல் நம்முடைய கர்மானுகுணமாகப் பகவான் இவர்களைக்கொண்டு இப்படி செய்வித்தானென்று நினைத்துகொண்டும்- சாந்தசித்தராய் ஜிதேந்திரியராய் மிதாஹாரராய் யதாலாப ஸந்துஷ்டராய் வர்த்தித்தால் பகவானுக்கு அத்யந்தம் அபிமதவிஷயமாவார்கள்.

இந்தப்பக்தவிஜயத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பக்தர்கள் இப்படிப்பட்ட நிஷ்டையுடன்கூடிப் பக்திக்ரீதனை ஸ்ரீபாண்டுரங்கனைத் தங்களுக்குஸ்வாதீனனுக்கிக்கொண்டு அவனுடன்கலந்து பரமானந்தத்தை அனுபவித்ததன்றித் தங்கள் க்ஞானனுஷ்டானங்களால் பலரையுந் தங்களைப்போல் ஜீவன்முக்த்தர்களாக்கினூர்கள். ஆகையால் அப்படிப்பட்ட பரமபக்தர்கள்சரித்திரத்தைபக்தியுக்தராய்வாசிக்கிறவர்கள்விஷயத்தில் ஸ்ரீபாண்டுரங்கநாதன் பரமதயாளுவாய்க் கன்றையிழந்தபசு அக்கன்றின் தோலினுல்மூடப்பட்ட பொய்க்கன்றைப் பார்த்தவளவில் தன்கன்றை நினைத்துக்கொண்டு பால்கொடுக்குமாப்போல் ஜயதேவ ஞானதேவ நாமதேவர்கள் முதலான பூரணபக்தர்கள்இல்லாத இக்காலத்தில் அவர்களுடைய சரித்திரங்களைப் பிரேமையுடன்வாசிக்குமவர்களைப் பார்த்தவளவில்அந்தப்பக்தர்களை நினைத்துஅவர்கள் திறத்தில்செய்த கடாக்ஷத்தை இவர்களிடத்திலும் செய்வனென்பதற்கு ஐயமில்லை.

அவரவர்தமதம தறிவறிவகைவகை
அவரவரிறையவ ரெனவடியடைவர்கள்
அவரவரிறையவர் குறைவிலரிறையவர்
அவரவர்விதிவழி யடையநின்றனரே.

**அவதாரிகை ஸம்பூர்ணம்**